Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996

Official Property Record

Digitally Verified Record - Powered by Verified RealEstate™

திருவள்ளூர் மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களின் நடவடிக்கைகள்
முன்னிலை : திரு.க.கோபால கிருஷ்ணன், B.E.,

ந.க.எண்.[illegible]/2020/திருவள்ளூர்-3 நாள்.05.10.2020.

பொருள்: மனைப்பிரிவு - திருவள்ளூர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் திருவள்ளூர் மாவட்டம் - ஆர்.கே.பேட்டை வட்டம் - அம்மையார்குப்பம் ஊராட்சி மற்றும் கிராமம் - சர்வே எண்கள் [illegible] 308/7-ல் 1.19 ஏக்கர் பரப்பளவு இடத்தில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடத்திற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்குதல் - சம்பந்தமாக.

பார்வை:

1. வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) இரா.கி. பேட்டை ஊராட்சி ஒன்றியம் அவர்களின் கடித ந.க.எண்.A4/2019/அ6, நாள்.24.01.2020.
2. மனுதாரர் திரு/ள்.V.G. ஊரப்பன், V.G. கன்னியப்பன், V.G. நாகரத்தினம், அவர்களின் இணையதள விண்ணப்ப எண்.202005401013287, நாள்.30.01.2020.
3. அரசாணை (2டி) எண்.71, ஊரக வளர்ச்சித் துறை, நாள்.16.06.2003.
4. நகர் ஊரமைப்பு சிறப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை கடிதம், ந.க.எண். 14519/1988/பிசிபி, நாள்.27.04.1988.
5. நகர் ஊரமைப்பு சிறப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை கடிதம், ந.க.எண். 40483/1990/எல்எ1, நாள்.07.11.1992.
6. நகர் ஊரமைப்பு சிறப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை கடிதம், ந.க.எண். 16985/2000/எலை2, நாள்.29.09.2007.
7. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம், ந.க.எண்.7978/2012/எலை2, நாள்.19.04.2012.
8. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம், ந.க.எண்.12544/2014/சிபி, நாள்.04.07.2014.
9. இவ்வலுவலகக் கடிதம், இதே எண், நாள்.04.03.2020 (சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடுகள் உள்ளாட்சிக்கு ஒப்படைக்க கோரியது).
10. வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) இரா.கி. பேட்டை ஊராட்சி ஒன்றியம் கடிதம், நாள்.31.07.2020 (தானபத்திர எண்.1536/2020, நாள்.29.07.2020, மற்றும் தீர்மான எண்.[illegible]/07/2020-ல் மின்சார வாரியம் தானப்பத்திர எண்.1531/2020 நாள்.09.07.2020, நகல் பெறப்பட்டுள்ளது) திருத்தல் பத்திரம் எண்.1917/2020,நாள்.28.08.2020 மற்றும் 1927/2020, நாள்.28.08.2020
11. இவ்வலுவலக கடிதம் இதே எண்.நாள்.21.09.2020(நன்னிலை வரி மற்றும் OSR கட்டணம் கோரியது).
12. மனுதாரர் திரு/ள்.V.G. ஊரப்பன், V.G. கன்னியப்பன், V.G. நாகரத்தினம், அவர்களின் கடிதம் மற்றும் இணைப்புகள், நாள்.25.09.2020 (நன்னிலை வரி OSR கட்டணம் செலுத்தியது).
13. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம், ந.க.எண்.1091/2016/MP1, நாள்.11.05.2017.
14. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம், ந.க.எண்.13686/2017/LA1, நாள்.08.09.2017.
15. வேளாண்மை இணை இயக்குநர்(பொ), திருவள்ளூர் அவர்களின் கடித ந.க.எண்.மதி2/4844/2018, நாள்.20.07.2018 (புன்செய் நில தடையின்மைச் சான்று வழங்கப்பட்டுள்ளது.)
16. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை, ந.க.எண். 12201/2017/Spl. Cell, நாள்.28.09.2017.

*****

உத்தரவு :

1. திருவள்ளூர் மாவட்டம், ஆர்.கே.பேட்டை வட்டம், அம்மையார்குப்பம் ஊராட்சி மற்றும் கிராமம், சர்வே எண்கள்.308/6, 308/7-ல் 1.19 ஏக்கர் பரப்பளவு இடத்தில் அமையவுள்ள குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடத்திற்கு, பார்வை 1-ல் கண்ட கடிதத்துடன் பெறப்பட்ட ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு, கீழ்க்கண்ட நிபந்தனைகளுடன் ஒப்புதல் வழங்கப்படுகிறது.

..2..

G. nagarathi

2. இவ்வரைபட விவரம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுடன் தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டு ந.வ./மா.ந.ஊ.உ.இ.(திருவள்ளூர்)எண்.96/2020 என எண்ணிடப்பட்டு, இரண்டு தொகுப்புகள் மேல் நடவடிக்கைக்காக இத்துடன் அனுப்பி வைக்கப்படுகிறது.

3. பார்வை 10-ல் காணும் கடிதம் மூலம் சாலை (ம) உள்ளாட்சிக்குரிய பொது ஒதுக்கீடு மற்றும் மின்வாரியத்திற்கான பொது ஒதுக்கீடு உள்ளாட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டதற்கான தானபத்திரம் பெறப்பட்டுள்ளது. மேலும், பார்வை 12-ல் கண்ட மனுதாரரின் கடிதம் மூலம் அரசுக்கு செலுத்தப்பட வேண்டிய தனியுரிமை ரூ.11,500/-(ருபாய் பதினோராயிரத்து ஐநூறு மட்டும்) பரிசீலனைக் கட்டணம் ரூ.7,500/-(ருபாய் ஏழாயிரத்து ஐநூறு மட்டும்) மற்றும் **OSR கட்டணம்** ரூ.13,000/-(ருபாய் பதிமூன்றாயிரம் மட்டும்) ஆகியவை செலுத்தப்பட்டதற்கான விவரம் பெறப்பட்டுள்ளது.

4. மேலும், பார்வை 4, 5, 6 மற்றும் 7-ல் சுட்டிய, நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் கடிதங்களில் தெரிவித்துள்ளபடி தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

5. பார்வை 1-ல் சுட்டியுள்ள அரசாணையின்படி சாலைகளை மனுதாரரிடமிருந்து தானப் பத்திரம் மூலம் பெற்றும், சாலைகள், குடிநீர், தெரு விளக்குகள் மற்றும் வடிகால் வசதிகளை செய்து மனைப்பிரிவை முழுமையாக அபிவிருத்தி செய்து அதனை உள்ளாட்சிக்கு ஒப்படைத்த பின்னரும், மேலும், மேற்கண்ட அரசாணையில் கண்டுள்ள இதர நடைமுறைகளை பின்பற்றியும் மன்றத்தின் அனுமதி பெற்றும் இம்மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மனைப்பிரிவு நிபந்தனை 19(இ), 19(உ) குறித்து உறுதி செய்த பின்னரே ஒப்புதல் வழங்கப்பட வேண்டும் என்றும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

6. மனைப்பிரிவிற்கு உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் அளிக்கப்படும் போது மனைப்பிரிவு நிபந்தனை எண்.19(ஈ)-ன்படி இவ்வுத்தரவின் நகலினை உடனடியாக இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

7. The Land Ownership is the responsibility of the local Authority, as per the G.O.Ms No.78 RDLA dated:16.06.2003 and this technical approval for the layout is accorded based on the land ownership certificate furnished by the executive authority.

8. பார்வை 10-ல் கண்ட கடிதம் மூலம் பெறப்பட்ட இணைப்புகளில் உள்ளவாறு ஊராட்சி மன்றத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்ட மனைப்பிரிவு சாலைகள் இடத்தினை தனி புல உட்பிரிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

9. உத்தேச மனைப்பிரிவில் அமையும் மனைப்பிரிவு சாலைகள் உள்ளாட்சியால் தெரிவிக்கப்படும் சாலையின் அகலம், அதன் உயரம் மற்றும் தரத்திற்கு அமைக்கப்பட்டுள்ளதா என்பதை சம்பந்தப்பட்ட ஆர்.கே.பேட்டை ஊராட்சி ஒன்றிய பொறியாளர், தலைவர் அவர்களால் ஆய்வு செய்து சாலையின் நிலை குறித்த தகுதிச் சான்று பெறப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

10. உள்ளாட்சியின் ஒப்புதலுடன் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தினை சம்பந்தப்பட்ட பத்திரப் பதிவு அலுவலகத்திற்கு தகவலுக்கும் உரிய நடவடிக்கைக்கும் அனுப்புமாறு தெரிவிக்கப்படுகிறது.

சிறப்பு நிபந்தனைகள் :

1. பார்வை 8-ல் சுட்டிய நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.12544/2014/சிஎம், நாள்.04.07.2014 சிறப்பு நிபந்தனையில் "நகர் ஊரமைப்புத் துறை எந்த ஒரு பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி / திட்ட அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில்நுட்ப அனுமதி / திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம் பட்டா, தானப்பத்திரம், பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன் மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும், அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல.

G. Nagarath

2. பார்வை 13-ல் காணும் நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கையின்படி, அரசாணை எண்.79, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்சித் துறை ந.வ.4(3), நாள்.4.5.2017-ல்,

a) இனம் 3-ல் மேற்படி மொத்த மனைப்பிரிவு இடத்திற்கு ரூ.1000/- கூராய்வு கட்டணமாக உள்ளாட்சி பெற்றுக் கொண்டும்,

b) இனம் 9-ன்படி "use conversion charge at the rate of 3% of the market value fixed under section 47-AA of the Indian Stamp Act, 1899 (Central Act 2 of 1899) and deposit the amount in Government head of Account and grant permission carrying out the development." என தெரிவிக்கப்பட்டுள்ளதால், மேற்படி மனையின் பரப்பிற்கு 3% சந்தை மதிப்பு (Market value of land) தொகையை அரசுக் கணக்கில் பெறப்பட்ட பின்னரே உள்ளாட்சி இறுதி ஒப்புதல் வழங்கப்படல் வேண்டும்.

Head of Account

"0217 Urban Development 60 - Other Urban
Development Schemes - 800 Other Receipts - AS
Receipts Under Land Use Conversion Charges - 27
Non Taxation fees - 0 collections".
(DPC: 0217-60-800-AS-2790)

3. பார்வை 14-ல் காணும் நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கையின்படி, உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடங்களை உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றி வருவாய் துறை சர்வே எண் உட்பிரிவுகள் செய்து அதற்கான விபரங்கள்.பெறப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

4. பார்வை 16-ல் காணும் நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை "The Tamil Nadu Government in G.O.Ms.No.112, Housing and Urban Development Department dated:22.06.2017 have approved the Tamil Nadu Real Estate (Regulation & Development) Act 2016. The promoter has to advertise, market, book, sell or offer for sale, or invite persons to purchase in any manner any plot, apartment or building, as the case may be, in any Real Estate Project or part of it only after registering the Real Estate Project with the Real Estate Regulatory Authority"

உதவி இயக்குநர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
திருவள்ளூர் மாவட்டம்.
5.10.2020

<u>இணைப்பு :</u>
வரைபடம் மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகள் (2 நகல்கள்).

<u>பெறுநர் :</u>
தலைவர் / நிர்வாக அலுவலர்
அம்மையார் குப்பம் ஊராட்சி மன்றம்
ஆர்.கே.பேட்டை ஊராட்சி ஒன்றியம்
ஆர்.கே.பேட்டை வட்டம். திருவள்ளூர் மாவட்டம்.

நகல் :

1. தி/ள்.V.G. ஊரப்பன், V.G. கன்னியப்பன்.
   V.G. நாகரத்தினம்,
   சுப்பிரமணியசாமி கோயில் தெரு.
   அம்மையார்குப்பம் கிராமம்.
   ஆர்.கே.பேட்டை வட்டம்.
   திருவள்ளூர் மாவட்டம் 631 301.
2. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை-02.
   அவர்களுக்கு மனைப்பிரிவு வரைபடம் மற்றும்
   மனைப்பிரிவு நிபந்தனைகளுடன் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
3. மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருவள்ளூர் மாவட்டம்.
   மனைப்பிரிவு வரைபடம் மற்றும் நிபந்தனைகள்.

G. Nagaratti

ஊராட்சிமன்ற தலைவர் அம்மையார்குப்பம் ஊராட்சி அவர்களின் செயல்முறைகள்
...னிலை திருமதி / ஆனந்தி சேகர் / வளை

...எண் 69 / 2020 / ... நாள் 04/12/2020

பொருள் மனைப்பிரிவு திருவள்ளூர் மாவட்டம் - இரா.கி.பேட்டை ஊராட்சி ஒன்றியம் அம்மையார்குப்பம் ஊராட்சி - கிராம சர்வே எண் 308/6 308/7 ல் 1.19 ஏக்கர் பரப்பளவு கொண்ட மனையிடத்தில் குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடம் மற்றும் தொழில்நுட்ப நகர் ஊரமைப்புதுறை, உதவி இயக்குநர் திருவள்ளூர் அவர்களால் அனுமதி வழங்கியது இறுதி ஒப்புதல் வழங்குதல் தடையின்மை சான்று வழங்குதல் - சார்ந்து

பார்வை :

1. வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) இரா.கி.பேட்டை ஊராட்சி ஒன்றியம் அவர்களின் கடிதம் ந.க.எண் 44/2019/அ6 நாள் : 24/01/2020
2. அரசாணை எண் 71 ஊரக வளர்ச்சி துறை நாள் : 16/06/2003
3. நகர ஊரமைப்பு உதவி இயக்குனர் திருவள்ளூர் அவர்க்ளின் ந.க.எண் 267/2020 திருவள்ளூர் ந.க.எண் 05/10/2020
4. சார்பதிவாளர் இரா.கி.பேட்டை அவர்களின் கடித எண் 126/2020 நாள் 05/11/2020
5. ஊராட்சி மன்றத்தலைவர், அம்மையார்குப்பம் ஊராட்சி அவர்களின் தீர்மான எண் : 60, நாள் : 03/07/2020

****

இரா.கி.பேட்டை ஊராட்சி ஒன்றியம், அம்மையார்குப்பம் ஊராட்சி மற்றும் ... சர்வே எண் 308/6, 308/7 ல் 1.19 ஏக்கர் பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள குடியிருப்பு மனைப்பிரிவிற்கு ஒப்புதல் பெறுவதற்கு பொது ஒதுக்கீட்டின்படி உள்ளாட்சிக்கு தானமாக அளிக்கபட வேண்டிய இடத்திற்கான கட்டணம், உள்ளாட்சிக்குரிய பொது இடம் மின்வாரியத்திற்கான இடம், சாலைகள், குடிநீர், தெருவிளக்குகள் மற்றும் கழிவுநீர் கால்வாய் ஆகியவைகளுக்கும் உள்ளாட்சிக்கும் தானமாக ஒப்படைக்கப்பட்டு பார்வை ல் காணும் கடித்ததின்படி ஊரமைப்பு உதவி இயக்கநர் திருவள்ளூர் அவரகளுக்கு மனைப்பிரிவிற்கு வரைபடம் மற்றும் தொழிநுட்ப அனுமதிக்கு ஒப்புதல் வழங்க வேண்டி அனுப்பி வைக்கப்பட்டது.

பார்வை 4 ல் காணும் இரா.கி.பேட்டை சார்பதிவாளர் அவர்களிடமிருந்து ... மதிப்பு (Market Value of Land) மற்றும் சந்தை மதிப்புகளின்படி சர்வே எண் 308/6 செண்ட் 1 க்கு ரூ.9380/- மற்றும் சர்வே எண் 308/7 க்கு செண்ட் 1 க்கு ரூ.8040/- ... மொத்தம் ரூ. 24500/- எழுத்தால் ரூபாய் இருபத்து நான்காயிரத்து ஐநூறு மட்டும் விண்ணப்பதாரரிடமிருந்து பெறப்பட்டு " 0217 Urban Development 60 - Other Urban Development Schemes - 800 Other Receipts – AS, Receipts Under Land Use Conversion Charges ... Non Taxation Fees - 09 Collection" DPC : 0217-60-800-AS-2790) என்ற அரசு கணக்கு தலைப்பில் செலுத்தப்பட்டு நகல் இத்துடன் இணைககப்பட்டுள்ளது. இத்தொகை பற்று மேற்கொள்ளப்பட அரசு ஆணைகளின் நிபந்தனைகளுக்கு உட்பட்டது என்றும், இம்மனைபிரிவிற்கு கூராய்வு கட்டணம் ரூ.1000/- ரூபாய் எழுத்தால் ஆயிரம் மட்டும் விண்ணப்பதாரர் அம்மையார்குப்பம் ஊராட்சிக்கு தொகை இரசீதுமூலம் செலுத்தியுள்ளனர்

G. Nagarath

மேற்படி நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் திருவள்ளூர் அவர்களின் பார்வை 3ல் காணும் கடிதத்தின்படி நகர் ஊரமைப்புத்துறை சட்டபூர்வமான தொழில்நுட்ப அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிபடுத்தப்படவில்லை தொழில்நுட்ப அனுமதி / திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரர்களின் விண்ணப்பத்துடன் சமர்பித்த ஆவணங்களில் (கிரைய பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானபத்திரம், பொது அதிகார பத்திரம் பத்திரம் மேலும் பல) விண்ணபதாரர்கள் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன்மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரர்களுக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும் விண்ணப்பதாரர்க்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிபடுத்திகொள்ள வேண்டும். மேலும் அதன்மேல் வேறு யாரேனும் தனிநபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம் இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத்துறை பொருத்தமான அமைப்பு மற்றும் உள்ளாட்சி துறை அல்ல என்பதை விண்ணப்பதாரர்க்கு தெரிவிக்கப்படுகிறது.

எனவே பார்வை 2 ல் காணும் அரசாணைகள் பார்வை - 3 ல் காணும் கடிதத்தில் தெரிவிக்கபட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்ப்பட்டது என்றும் பார்வை 5 ல் காணும் அம்மையார்குப்பம் ஊராட்சிமன்ற தீர்மானத்தின்படி அங்கீகரித்து இம்மனைப்பிரிவு வரைபடத்திற்கு மேலொப்பம் செய்து இறுதி ஒப்புதல் வழங்கியும். மேலும் இந்த உரிமை உங்களுக்கு சொந்தமில்லாத இடத்தில் (தானமாக வழங்கிய இடம்) மனைப்பிரிவிற்க்கு விற்கவோ வாங்கவோ உரிமை கோர இயலாது என்பதை தெரிவித்தும் உத்தரவிடப்படுகிறது.

இணைப்பு
வரைபடம் மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகள்

A.T. Anandhi

தலைவர்
அம்மையார்குப்பம் ஊராட்சி
அம்மையார்குப்பம்

எண் ..1/ 2021-21....
தேதி 04.12.2021

பெறுநர்

திரு. V.G. சென்னியப்பன் V.G. சென்னியப்பன் V.G. நாகரத்தினம்
சுப்பிரமணியசாமி கோயில் தெரு,
அம்மையார்குப்பம் - 631 301
இரா.கி.பேட்டை ஒன்றியம்.

நகல்

1. உதவி இயக்குநர் (ஊராட்சிகள்), திருவள்ளூர்.
2. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருவள்ளூர்
3. சார்பதிவாளர், இரா.கி.பேட்டை

ஆகியோர்களுக்கு தகவலுக்காக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

G. Nagarathinam

அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவின் ஒதுக்கீடு விவரம்

வ.எண்	ஒதுக்கீடு விவரம்	அளவுகள்	விழுக்காடு
01	மனைப்பிரிவு இடத்தின் பரப்பளவு	1.19 ஏக்கர் (51836 ச.அடி)	-
02	சாலையின் பரப்பு	13978 ச.அடி	-
03	சாலையின் பரப்பு போக மனைப்பிரிவு இடத்தின் பரப்பு	37858 ச.அடி	-
04	உள்ளாட்சிக்குரிய பகுதி	213 ச.அடி	0.56
05	மின்வாரியத்திற்குரிய பகுதி	197 ச.அடி	0.52
06	பொது ஒதுக்கீடு	உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கவேண்டிய பூங்கா பகுதி 55 சமீ ஆனது அரசாணை எண் 18 ந.நி. (ம) கு.நி.வ.துறை 04/02/2019 ரூ.13000/- திருவள்ளூர் SBI வங்கியில் 25/09/2020 ல் செலுத்தப்பட்டது.	
07	கடை	1395 ச.அடி	2.69

தலைவர்
அம்மையார்குப்பம் ஊராட்சி
அம்மையார்குப்பம்



our services doesn't just end there

Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



empowering your real estate decisions with smart tools

Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your
real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate